நீடூர் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு மதிப்பீடு அனுமதி வழங்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே, அந்த மதிப்பீடு அனுமதியை வழங்கி, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை உடனே துவங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை மின் நிலையம் கட்ட நிலம் வாங்கப்பட்டு, மதிப்பீடு அனுமதி பெறுவதற்குத் தடை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அந்தத் தடையை விரைவில் நீக்குவதற்கும், அங்கு புதிய துணை மின் நிலையம் கட்டுவதற்கும் வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

புதிய கட்டடம்

***8568—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த அங்கன்வாடி மையக்

2012 ஏப்ரல் 19]

கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே ரூ.47.61 கோடி செலவில் சீர் செய்வதற்கு உத்தரவிடப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக, புதியதாக அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட வேண்டுமென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், தேவையான நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் புதிய கட்டடங்களைக் கட்டிக்கொள்ளலாம். புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவில் பொதுப் பணித் துறையின் பொறியாளர்கள், உள்ளாட்சி அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழுவின் பரிந்துரையின்பேரில், புதிய கட்டடம் கட்டிக்கொள்ளலாம் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அறிவுறுத்தப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மக்களுடைய இதயங்களில் நீங்காத இடம்பெற்று, நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உன்னதத் திட்டமான சத்துணவுத் திட்டத்தின் பகுதியாக, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து இடங்களிலும் இந்த அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. இந்த அங்கன்வாடி மையங்கள் தொடங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தினால், பல கட்டடங்கள் சிதிலமடைந்து சீர்கெட்டு இருக்கின்றன. அதையெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அம்மா அவர்கள் சீர்செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது தமிழகத்தில் எத்தனை கட்டடங்கள் பழுதடைந்து இருக்கின்றன? அதோடு என்னுடைய சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் எத்தனை கட்டடங்கள் சிதிலமடைந்து இருக்கின்றன? அவற்றையெல்லாம் இந்த நிதியாண்டிலேயே

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்செய்து தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், ஒவ்வொரு கட்டடத்தையும் பழுது நீக்குவதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரே கேள்வியில் கிட்டத்தட்ட நான்கு துணைக் கேள்விகளைக் கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்தம் 54,439 மையங்கள் இருக்கின்றன. 33,288 மையங்கள் அரசுக் கட்டடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. 15,313 மையங்கள் அரசு அல்லாத தனியார் கட்டடங்களிலே இயங்கி கொண்டிருக்கின்றன. 5,838 மையங்கள் இணைந்து ஒரே கட்டட வளாகத்திற்குள்ளே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான மானாமதுரை வட்டாரத்தில், மொத்தம் 147 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. இதில் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் மையங்களின் எண்ணிக்கை 93. வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை 31. வாடகையில்லாத கட்டடத்தில் இயங்குபவை 23. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மையத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டிருக்கிறார். ஒரு மையத்திற்கு ரூ.50,000/– செலவிடப்படுகிறது. குறு அங்கன்வாடி மையமாக இருந்தால்* (Mini Centre) *ரூ.10,000/– செலவிடப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற ரூபாய் 47 கோடியே 61 இலட்சம் ரூபாய், 7,449 பெரிய அங்கன்வாடி மையங்களுக்கும், 10,372 குறு அங்கன்வாடி மையங்களுக்கும் பிரித்து அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்,*

2012 ஏப்ரல் 19]

பேச வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

அரசு கலைக் கல்லூரி

***5716—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதியில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்து தற்போது கருத்துரு ஏதுமில்லை. தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 18—7—2011 அன்று திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில், ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்கி வைத்தார்கள். அங்கு மாணவர்கள் சேர்ந்து பயில்வதற்காக அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, துறையூர் தொகுதியைச் சார்ந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சக்தியைத் திரட்டும் மகா சக்தியே; மதிநுட்பம் கொண்ட மாதரசியே; எண்ணிலா மொழிகள் பேசும் இணையற்ற முதல்வரே; இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*